பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4

05 12 2024 7 15
வியாழக்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள் -</u>

1. இந்தியா — வளைகுடா நாடுகளுக்கு இடையேயான ஒத்துழைப்பு மேலும் வலுவடையும் என்று பிரதமர் திரு நரேந்திரமோடி நம்பிக்கை தெரிவித்துள்ளார்.
2. மகாராஷ்ட்ரா மாநில முதலமைச்சராக திரு தேவேந்திர ஃபட்நாவிஸ் இன்று பதவியேற்கிறார்.
3. பி எஸ் எல் வி-சி-59 ராக்கெட் மூலம், **PROBA-3** செயற்கைக்கோள் இன்று மாலை விண்ணில் செலுத்தப்படுகிறது.
4. விவசாயிகளின் பிரச்சினைகள் தொடர்பாக பேச்சு நடத்த மத்திய அரசு தயாராக இருப்பதாக வேளாண்துறை இணை அமைச்சர் திரு பாகிரத் சௌத்திரி கூறியுள்ளார்.
5. உலக செஸ் சாம்பியன்ஷிப் போட்டியில் இந்தியாவின் குகேஷ் - சீனாவின் டிங் லிரேன் இடையேயான எட்டாவது சுற்று ஆட்டம் ட்டிராவில் முடிவடைந்தது.

*---- இனி விரிவான செய்திகள் ---*

**[]<<<>>>[]**

இந்தியா — வளைகுடா நாடுகளுக்கு இடையேயான ஒத்துழைப்பு மேலும் வலுவடையும் என்று பிரதமர் திரு நரேந்திரமோடி நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

புதுதில்லி வந்துள்ள குவைத் வெளியுறவுத்துறை அமைச்சர் திரு அப்துல்லா அலி அல் யஹியா, நேற்று பிரதமரை சந்தித்து இருதரப்பு ஒத்துழைப்பு குறித்து பேச்சு நடத்தினார்.

வர்த்தகம், முதலீடு, எரிசக்தி, தொழில்நுட்பம், கலாச்சாரம், இரு நாட்டு மக்களுக்கு இடையேயான நட்புறவு மேலும் வலுப்படுத்துவது குறித்து இரு தலைவர்களும் அப்போது விவாதித்தனர்.

குவைத்தில் வசிக்கும் பத்து லட்சம் இந்தியர்களின் நலனில் அக்கறை கொண்டுள்ளதற்காக திரு நரேந்திரமோடி, குவைத் அமைச்சருக்கு நன்றி தெரிவித்தார்.

மேற்கு ஆசியாவில் விரைவில் அமைதி திரும்புவதற்கு இந்தியாவும் - குவைத்தும் ஆதரவு அளிக்கும் என்றும் இரு தலைவர்களும் தெரிவித்தனர்.

அதைத் தொடர்து வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கரை குவைத் வெளியுறவுத்துறை அமைச்சர் சந்தித்து பேசினார்.,

இரு நாடுகளின் வெளியுறவுத்துறை அமைச்சர்கள் நிலையில் கூட்டு ஆணையம் ஏற்படுத்துவதற்கான ஒப்பந்தத்தில் இருவரும் கையெழுத்திட்டனர்.

அப்போது பேசிய திரு ஜெய்சங்கர், வர்த்தகம், முதலீடு, எரிசக்தி, தகவல் தொழில்நுட்பம், கலாச்சாரம் உள்ளிட்ட பல்வேறு துறைகளில் குவைத்துடனான ஒத்துழைப்பை வலுப்படுத்த இந்தியா உறுதிபூண்டுள்ளதாக கூறினார்.

குவைத்தில் வசிக்கும் இந்தியர்கள் இரு நாடுகளுக்கும் இடையேயான இணைப்புப் பாலமாக திகழ்கின்றனர் என்றும் அவர் தெரிவித்தார்.

இந்த சந்திப்பின்போது பேசிய குவைத் அமைச்சர், தமது நாட்டின் முக்கிய நட்புறவு நாடாக இந்தியா திகழ்கிறது என்று கூறினார்.

உணவு பாாதுபாப்பு, இணையதள பாதுகாப்பு ஆகியவற்றில் இரு நாடுகளும் இணைந்து செயல்படுவதாகவும் திரு அப்துல்லா அலி அல் யகியா தெரிவித்தார்.

**[]<<<>>>[]**

பிரதமர் திரு நரேந்திரமோடியின் சிறந்த நிர்வாகம் காரணமாக உலகில் கடந்த பத்து ஆண்டுகளில் இந்தியா பெரும் முன்னேற்றம் அடைந்துள்ளதாக ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழக பேராசிரியர் சௌமித்ர தத்தா கூறியுள்ளார்.

இது தொடர்பாக ஊடகம் ஒன்றுக்கு பேட்டியளித்த அவர், மிகப்பெரிய பொருளாதார சக்திமிக்க நாடு என்ற நிலையை நோக்கி இந்தியா சென்று கொண்டிருப்பதாக தெரிவித்தார்.

நாட்டில் உள்கட்டமைப்பு திட்டங்கள் பெருமளவு நிறைவேற்றப்பட்டுள்ளதாக அவர் பாராட்டு தெரிவித்தார்.

**[]<<<>>>[]**

விவசாயிகளின் பிரச்சினை தொடர்பாக பேச்சு நடத்த மத்திய அரசு தயாராக இருப்பதாக வேளாண்துறை இணை அமைச்சர் திரு பாகிரத் சௌத்திரி கூறியுள்ளார்.

நாடாளுமன்றா வளாகத்தில் நேற்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், விவசாயிகள் தங்களுடைய பிரச்சினைகள் குறித்து அரசிடம் பகிர்ந்து கொள்ள வேண்டுமென்று தெரிவித்தார்.

அதற்குத் தீர்வு காண்பதற்கான வழிவகைகளை அரசு மேற்கொள்ளும் என்றும் திரு பாகிரத் சௌத்திரி கூறினார்.

[]<<<>>>[]

நாட்டில் சிறுமிகளின் பாலின விகிதம் அதிகரித்து வருவதாக மத்திய மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத்துறை இணை அமைச்சர் திருமதி சாவித்திரி தாகூர் தெரிவித்துள்ளார்.

மாநிலங்களவையில் நேற்று கேள்வி நேரத்தின்போது இதனைத் தெரிவித்த அவர், 2014-15-ஆம் ஆண்டில் ஆயிரம் ஆண்களுக்கு தொள்ளாயிரத்து 18 பெண்கள் என்று இருந்த நிலையில், கடந்த நிதி ஆண்டில் அதன் எண்ணிக்கை தொள்ளாயிரத்து 30-ஆக அதிகரித்துள்ளது என்று கூறினார்.

பள்ளிகளில் சிறுமிகளின் சேர்க்கை விகிதமும் அதிகரித்துள்ளதாக திருமதி சாவித்ரி தாகூர் தெரிவித்தார்.,

[]<<<>>>[]

ஆயூஷ்மான் சுகாதாரத் திட்டத்தின் கீழ் ஆயுத காவல்படை, அஸ்ஸாம் ரைபில்ஸ், தேசிய பாதுகாப்புப்படை, தேசிய பேரிடர் மீட்புப்படையினர் மற்றும் அவர்களது குடும்பத்தினருக்காக 41 லட்சத்திற்கும் மேற்பட்ட சுகாதார அட்டைகள் வழங்கப்பட்டுள்ளதாக மத்திய உள்துறை இணை அமைச்சர் திரு நித்தியானந்த ராய் தெரிவித்துள்ளர்.,

மாநிலங்களவையில் கேள்வி நேரத்தின்போது இதனை தெரிவித்த அவர், இந்த திட்டத்தின் கீழ் 14 லட்சத்து 77 ஆயிரம் இழப்பீடு கோரிக்கைகளுக்கு தீர்வு காணப்பட்டுள்ளதாக கூறினார்.

[]<<<>>>[]

மகாராஷ்ட்ரா மாநில முதலமைச்சராக திரு தேவேந்திர ஃபட்நாவிஸ் இன்று பதவியேற்கிறார்.

மும்பையில் இன்று மாலை ஆஷாத் மைதானத்தில் நடைபெறும் பதவியேற்பு நிகழ்ச்சியில் ஆளுநர் திரு சி பி ராதாகிருஷ்ணன் அவருக்கு பதவிப்பிரமாணம் செய்து வைக்கிறார்.

இந்நிகழ்ச்சியில் பிரதமர் திரு நரேந்திரமோடி, மத்திய அமைச்சர்கள் மற்றும் தேசிய ஜனநாயகக் கூட்டணி ஆளும் மாநிலங்களின் முதலமைச்சர்கள் பங்கேற்கின்றனர்.

முன்னதாக நேற்று நடைபெற்ற பிஜேபி சட்டப்பேரவை உறுப்பினர்கள் கூட்டத்தில் அதன் குழு தலைவராக திரு பட்நாவிஸ் ஒருமனதாக தேர்ந்தெடுக்கப்பட்டார்.

இதனைத் தொடர்ந்து, திரு ஃபட்நாவிஸ், கூட்டணி கட்சித் தலைவர்களுடன் இணைந்து, ஆளுநர் திரு சி பி ராதாகிருஷ்ணனை சந்தித்து ஆட்சி அமைக்க உரிமை கோரினார்.

இதனை ஏற்றுக்கொண்ட ஆளுநர், புதிய அரசு அமைக்குமாறு திரு தேவேந்திர பட்நாவிஸுக்கு அழைப்பு விடுத்தார்.

**[]<<<>>>[]**

பி எஸ் எல் வி-சி-59 ராக்கெட் மூலம், **PROBA-3** செயற்கைக்கோள் இன்று மாலை விண்ணில் செலுத்தப்படுகிறது.

தொழில்நுட்ப கோளாறு காரணமாக நேற்று செலுத்தப்படவிருந்த இந்த செயற்கைக்கோள் இன்றைய தினம் செலுத்தப்படும் என்று இஸ்ரோ அறிவித்தது,

ஸ்ரீஹரிகோட்டாவிலிருந்து இன்று மாலை மணி 4.12-க்கு இந்த செயற்கைக்கோள் விண்ணில் செலுத்தப்படும் என்று இஸ்ரோ கூறியுள்ளது.

**[]<<<>>>[]**

பங்ளாதேஷில் இந்துக்கள் மீது நடத்தப்படும் தாக்குதலை கண்டித்து தமிழகத்தில் நேற்று நடைபெற்ற போராட்டத்தின்போது பிஜேபி மற்றும் இந்து அமைப்பினர் கைது செய்யப்பட்டதற்கு மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை இணை அமைச்சர் திரு எல் முருகன் கண்டனம் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், இந்த நடவடிக்கையின் மூலம் தமிழக அரசு எதிர்மறை எண்ணத்துடன் செயல்படுவதாகக் குற்றம்சாட்டினர்.

**[]<<<>>>[]**

பூட்டான் மன்னர் **Jigme khesar** இரண்டு நாள் பயணமாக இன்று புதுதில்லி வருகிறார்.

இப்பயணத்தின்போது பிரதமர் திரு நரேந்திரமோடி, வெளியுறவுத்துறை அமைச்சர் திரு ஜெய்சங்கர் உள்ளிட்டோரை சந்தித்து பேசவுள்ளார்.

அவரது பயணத்தின் மூலம் இரு நாடுகளுக்கும் இடையேயான இருதரப்பு ஒத்துழைப்பு மற்றும் நட்புறவு மேலும் வலுவடையும் என்று எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

[]<<<>>>[]

நாடு முழுவதும் 23 மாநிலங்களில் சுற்றுலாத் தலங்களை மேம்படுத்துவதற்காக மூவாயிரத்து 295 கோடி ரூபாயை ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக மத்திய சுற்றுலாத்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இதில் தமிழகத்தில் மாமல்லபுரம், நீலகிரி மாவட்டம். உதகமண்டலத்தில் உள்ள தேவாலாவில் 169 கோடி ரூபாய் மதிப்பில் வளர்ச்சித் திட்டங்களை மேற்கொள்வதற்கு நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாக சுற்றுலா அமைச்சகத்தின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

மாமல்லபுரத்தில் நந்தவனம் பாரம்பரிய பூங்காவை மேம்படுத்துவதற்காக 99 கோடியே 67 லட்சம் ரூபாயும், நீலகிரி மாவட்டம் தேவாலாவில் பூந்தோட்டம் அமைப்பதற்கு 70 கோடியே 23 லட்சம் ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாக மத்திய சுற்றுலாத்துறை அமைச்சகத்தின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

இந்த திட்டங்களை செயல்படுத்துவதன் மூலம் சுமார் ஐயாயிரம் பேருக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும் என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

[]<<<>>>[]

நாட்டில் மகாராஷ்டிராவின் மத்திய பகுதி, கர்நாடகா, ஆந்திர பிரதேசத்தின் கடலோரப் பகுதி, ஏனம், ராயலசீமா பகுதிகளில் இன்று மழை பெய்ய வாய்ப்பு இருப்பதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

அரபிக்கடலில் கடல் கொந்தளிப்புடன் காணப்படும் என்பதால் அதன் கிழக்கு மத்திய மற்றும் தென்மேற்குப் பகுதிகளுக்கு மீனவர்கள் செல்வதை தவிர்க்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

[]<<<>>>[]

உலக செஸ் சாம்பியன்ஷிப் போட்டியில் இந்தியாவின் குகேஷ் - சீனாவின் டிங் லிரேன் இடையேயான எட்டாவது சுற்று ஆட்டம் ட்டிராவில் முடிவடைந்தது.

சிங்கப்பூரில் நடைபெற்று வரும் இப்போட்டியில் இதுவரை நடைபெற்ற எட்டு சுற்று ஆட்டங்களில் ஆறு சுற்று ஆட்டங்கள் ட்டிராவில் முடிவடைந்துள்ளன.

இரு வரும் தலா ஒரு போட்டியில் வெற்றிபெற்று தலா நான்கு புள்ளிகளைப் பெற்று சம நிலையில் உள்ளனர்.

**[]<<<>>>[]**

ஆசிய கோப்பை ஜூனியர் ஹாக்கிப் போட்டியில் இந்தியா கோப்பையை வென்றுள்ளது.

மஸ்கட்டில் நேற்று நடைபெற்ற இறுதி ஆட்டத்தில் இந்தியா ஐந்து - மூன்று என்ற கோல் கணக்கில் பாகிஸ்தானை வென்றது.

இந்திய தரப்பில் அரய்ஜித்சிங் ஹூண்டால் நான்கு கோலும், தில்ராஜ் சிங் ஒரு கோலும் அடித்தனர்.

இந்த வெற்றியை அடுத்து, ஆசிய கோப்பை ஜூனியர் ஹாக்கிப் போட்டியில் ஐந்தாவது முறையாக இந்தியா கோப்பையை வென்றுள்ளது குறிப்பிடத்தக்கது.

**[]<<<>>>[]**

சையது முஸ்தாக் அலி கோப்பைக்கான டுவெண்டி — டுவெண்டி கிரிக்கெட் போட்டியில் தமிழக அணி இன்று உத்தராகண்ட் அணியை எதிர்கொள்கிறது.

இந்தூரில் இப்போட்டி மாலை மணி 4-30-க்கு தொடங்குகிறது.,

**[]<<<>>>[]**

குவாஹாத்தி மாஸ்டர்ஸ் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் கருணாகரன், எஸ் எம் சுப்ரமணியன் ஆகியோர் காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளனர்.

ஆடவர் ஒற்றையர் பிரிவு இரண்டாவது சுற்றில் கருணாகரன் 19-21, 21-16, 21-17 என்ற செட் கணக்கில் சீனாவின் **Zi jun wang**த-வென்றார்.

மற்றொரு ஆட்டத்தில் எஸ் எம் சுப்ரமணியன் 21-10, 21-8 என்ற செட் கணக்கில் சக நாட்டு வீரரான அபியான் சிங்கை வென்றார்.

***End of News***